REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: ஐப்பசி 7உ சனி (23—10—54) ★ ★ :வெளியூர்: ஐப்பசி 8உ ஞாயிறு (24—10—54) [இதழ் 113

அரிசி உற்பத்தி அளவு அதிகரித்துள்ளது

புதுடில்லி, அக். 22—

இந்தியாவில் இவ்வாண்டில் 2 கோடி 71 லட்சம் டன் அரிசி உற்பத்தி செய்யப்பட்டது என்று தெரிகிறது. இதற்கு முன் ஒருபோதும் இந்த அளவு அரிசி உற்பத்தியானதே கிடையாது என்பது குறிப்பிடத்தக்கது. ஆனாலும், அரிசி உற்பத்தி தான் அதிகரித்துள்ளதே தவிர, உற்பத்தி செய்யப்படும் நில அளவு அதிகம் உயரவில்லை. சென்ற ஆண்டில் 761 லட்சம் ஏகர் நிலத்தில் நெல் சாகுபடி செய்யப்பட்டதாகவும், இவ்வாண்டில் 766 லட்சம் ஏகரில் சாகுபடி செய்யப்பட்டதென்றும் தெரிகிறது.

'இந்தியர்' என்ற கற்பனை உடைபடுகிறது!

வங்காள வர்த்தகத்தில் பிறர் ஆதிக்கம்

சொந்த இடங்களிலிருந்து ஊழியர் இறக்குமதி

உள்ளூர்க்காரர்கள் வேலை இன்றி திண்டாடும் துயரக் காட்சி!

வங்காளிகளிடையே சோகமும் - கோபமும்!

"வங்காளிகளல்லாத பிற வியாபாரிகள், கல்கத்தா நகரத்திற்குத் தொடர்ந்து வந்து கொண்டிருப்பது, நகர குடியிருப்பு, வேலை கிடைக்கும் பிரச்சினைகளை மேலும் நெருக்கடிக்குள்ளாக்கி வருகிறது."

"கல்கத்தாவிலும், சுற்றுப்புறங்களிலும் நடைபெறும் வர்த்தகங்களில் 90 சதவிகிதம் வங்காளிகளல்லாதார் ஆதிக்கத்தில் உள்ளது. தங்களுடைய வியாபார நிலையங்களில் பணிபுரிய, தங்கள் தங்கள் சொந்த மாநிலங்களிலிருந்தே, ஆட்களை இறக்குமதி செய்துகொள்ளுகின்றனர், அவ்வியாபாரிகள்! வங்காளிகளை வேலைக்கு அமர்த்திக் கொள்வதே கிடையாது."

"கிழக்கு வங்கத்திலிருந்து வந்த வங்க அகதிகளுக்குப் பிழைப்புத் தேடித் தருவதற்காக வென்றே சௌரிங்கி சாலை பகுதியில் சிறு கடைகள் புதிதாகக் கட்டப்பட்டன; ஆனால் ஆச்சரியமடையத் தகுந்த வகையில், அக்கடைகளில் பல, ஏற்கனவே வங்காளிகளல்லாதவர்களால் கைப்பற்றப்பட்டுள்ளன..............."

—மேற்குறித்தவாறு, கே. பி. முகர்ஜி என்பார், கல்கத்தா ஆங்கில நாள் இதழான 'ஸ்டேட்ஸ்மென்' பத்திரிகையில், 4-ந் தேதியிட்டு கடிதமொன்றை ஆசிரியருக்குத் தீட்டியுள்ளார்.

அவர் மேலும் அக்கடிதத்தில் குறிப்பிடுவதாவது:—

"பெரும்பாலான சர்க்காரால் நடத்தப்பெறும் தொழில், வியாபாரத் துறைகளில், ஆங்காங்கேயுள்ளவர்கள் வேலைக்கு அமர்த்தப்படுகிறார்கள். மாநில சர்க்கார்கள்கூட அதே முறையைப் பின்பற்றுகின்றன. அதே முறையை, மேற்கொண்டு, வங்காள மக்களின் நலத்தையும், நல்வாழ்வையும் பாதுகாக்க வங்காள சர்க்காரும், வியாபாரிகளும் ஏன் முன்வரக்கூடாது?"

கல்லக்குடி

(டிரங்க் போன் செய்தி)

திருச்சி, அக். 23—

திருச்சி தலைமை இரயில்வே அலுவலகத்திற்கு, டில்லியிலிருந்து கல்லக்குடி பற்றிய தஸ்தாவேஜுகள் எல்லாம் வந்துவிட்டன என்று தெரிகிறது.

கல்லக்குடி என்று டால்மியாபுரம் பெயரை மாற்றுவதற்கான உத்தரவும் கிடைத்துவிட்டதாம்.

டிக்கட்டுகளின் பெயரை மாற்றவும், எல்லா இரயில் நிலையங்களிலும் பெயர் மாற்றத்திற்கான அறிவிப்புகள் செய்யவும், கல்லக்குடி இரயில் நிலையத்தின் பெயர் பலகைகளில் புதியதாக பெயர் எழுதுவதற்கும் சுமார் இரண்டு வார காலமாகும் என்றும் தெரிய வருகிறது.

மோசடி செய்தவர்!

பம்பாயில் வசித்துவந்த பாகிஸ்தானைச் சேர்ந்த அலி லத்தா இப்ரகிம் என்பவர், கடந்த 1948-ம் ஆண்டில் ஒரு சினிமா படக் கம்பெனியை ஏமாற்றி ரூ. 1,21,000 பெற்றுக்கொண்டு மோசடி செய்து ஓடியதாக அவரை, பம்பாய் சிரால் கிளை துப்பறியும் போலீசார் கைது செய்துள்ளனர். அவருக்கு ஜாமீன் விடுதலை மறுக்கப்பட்டது.

திராவிடத் தொழிலுடன் போட்டியிட வடவர்க்கு மந்திரி கித்வாய் தூபம்

தென்னாட்டில் கரும்பு உற்பத்தி அதிகமிருப்பது கண்டு கொதிப்பு!

கான்பூர், அக். 21—

"கரும்பு உற்பத்தி, உத்திர பிரதேசத்திலும், பீகாரிலும் அதிகரிக்கப்படாவிட்டால் கரும்பாலைகள், வட இந்தியாவிலிருந்து, தென்னிந்தியாவிற்கு மாற்றப்படும்; ஏனெனில், தென்னிந்தியாவில், ஒரு ஏகரில் கரும்பு உற்பத்தி, வேறு பல வெளிநாடுகளோடு ஒப்பிடுகிற வகையில் அதிகமாக இருக்கிறது.

"தென்னிந்தியாவில் கரும்பு உற்பத்தி அதிகமாக இருப்பதால், அங்கு சர்க்கரை ஆலைகள் சிக்கனமாக நடத்தப்பட முடியும்,"

—இவ்வாறு, மத்திய உணவு மந்திரி ரபி அகமத் கித்வாய், உத்திர பிரதேச வியாபாரிகள் சங்கத்தில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

★

பொருமையின் வடிவங்கள்

உத்திர பிரதேச, பீகார் கூட்டு சர்க்கரை போர்டும், கரும்பு உற்பத்தியாளர் கூட்டுறவு சம்மேளனமும் இங்குகூடி சர்க்கரை சுயதேவைப் பூர்த்திக்கான முயற்சி குறித்து விவாதிக்கையில், உத்திர பிரதேசத்தில், கரும்பாலைகள் ஆண்டில் 90 தினங்கள்தான் வேலை செய்ய முடிகின்றதென்றும் தென்னிந்தியாவில் கரும்பாலைகள் 11 மாதங்கள் வேலை செய்கின்றன என்றும் பேசப்பட்டது.

அதிகமான வேலை தென்னிந்திய கரும்பாலைகளுக்குக் கிடைப்பது குறித்து தங்களின் பொருமையை வெளியிடும் வகையில் வட இந்தியாவிலிருந்து கரும்பு ஆலைகள் தென்னிந்தியாவிற்குச் செல்லவேண்டியுள்ளன வென்றும், கரும்பு உற்பத்தியில் தென்னிந்திய போட்டியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலைகளை மாற்ற மாநில அரசாங்கமும், தொழிலதிபர்களும் ஒத்துழைக்க வேண்டும் என்றும் கேட்கப்பட்டதாகத் தெரிகிறது.

தென்னிந்தியர்களைத் திருப்திப்படுத்த...

20 சர்க்கரை ஆலைகள் துவக்க அனுமதி!

புதுடில்லியில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் பேசுகையில் மத்திய சர்க்கார் உணவு, விவசாய அமைச்சர் அஹமத் கித்வாய், தென்னிந்தியா கரும்பு உற்பத்தியில் முன்னேறி வருவதாகக் குறிப்பிட்டார்.

இந்தியாவில் முதன் முதலாக உ. பி. - யும், பீகாரும்தான் கரும்பு உற்பத்தியிலீடுபட்டாலும், இப்போது தென்னிந்தியாதான் அந்த உற்பத்தித் தொழிலில் முன்னேற்றம் கண்டு வருகிறது என்றும், அதற்குக் காரணம், தென்னிந்தியாவின் சீதோஷ்ண நிலை கரும்புச் சாகுபடிக்கு அனுகூலமாக இருப்பதே என்றும், அதனாலேயேதான் உ. பி., பீகாரை விட தெற்கில் உள்ள நிலங்களில் அதிக மகசூல்.

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

வியட் நாம் மாதர்கள் ஆவேசம்!

ஆசிய — ஆப்பிரிக்க மாநாடு!

ஆசிய—ஆப்பிரிக்க மாநாடு ஒன்று ஜகார்தாவில் இந்த ஆண்டு இறுதிக்குள் நடைபெறலாமென இந்தோனேஷிய வெளிநாட்டு இலாகா மந்திரி குறிப்பிட்டார்.

பிரெஞ்சுத் துருப்புகள் மீது சோடா புட்டி-கற்கள் வீச்சு

மேடு பள்ளம் நிறுவும் இயந்திரங்களையும், அதன் தொடர்புடைய பொறிகளையும் வியட்நாம் பகுதியிலுள்ள டோங்கின் சமவெளியிலிருந்து அகற்றும் வேலையை பிரெஞ்சுத் துருப்புகள் மேற்கொண்டன. அதற்கு எதிராக, ஆயிரம் வியட்நாம் மாதர்கள் கூட்டமாகக் கூடிக்கொண்டு, ஆர்ப்பாட்டம் செய்யத் தொடங்கினர். கூட்டத்திலிருந்து சோடா புட்டிகளும், கற்களும் பிரெஞ்சுத் துருப்புகள்மீது விசப்பட்டன. அவர்களைக் கலைப்பதற்காகக் கண்ணீர்ப் புகைக் குண்டுகளைப் பிரெஞ்சு இராணுவம் கையாள வேண்டியதாயிற்று.

ஒரு பெண் நசுங்கி உயிரிழந்தாள்; பலர் காயமுற்றனர். 30-நபர்கள் வரை கைது செய்யப்பட்டனர்.

வியட்நாம் போர் நிறுத்த ஒப்பந்தத்திற்கிணங்க, அந்தப் பொறிகள், தாங்கள் முகாமிட்டுள்ள எய்பாங் பகுதிக்குக் கடத்திச் செல்லப்பட்டதாக பிரெஞ்சு அதிகாரிகள் கூறுகின்றனர்.

டோங்கின் பகுதியை காலி செய்யும் பிரெஞ்சு துருப்புகள், அங்குள்ள பாலங்களைத் தகர்த்தெறிந்து வருவதாகக் கம்யூனிஸ்டுகளால் கட்டிவிடப்பட்ட வதந்திதான், வியட்நாம் மாதர்கள் ஆர்ப்பாட்டத்திற்குக் காரணமாகும் என, அதே அதிகாரிகள் கூறுகின்றனர்.

இந்தோனேஷிய மந்திரிகள் மூவர் ராஜிநாமா

இந்தோனேஷிய ஐக்கியக் கட்சியைச் சேர்ந்த மூன்று மந்திரிகள் ராஜினமா செய்துவிட்டனர் என்று தெரிகிறது.

சின்னாட்களுக்கு முன், டாக்டர் சிமிஸ்டர், அரசாங்கப் பொருளாதாரத் திட்டங்கள் குறித்த கருத்து வேறுபாட்டின் காரணமாய், டாக்டர் சஸ்த்ரோமித் ஜோஜோவின் மந்திரி சபை அக்டோபர் 25-ந் தேதிக்குள் ராஜிநாமாச் செய்ய வேண்டுமென்றும், இல்லாவிடில் மந்திரி சபையில் அங்கம் வகிக்கும் தனது கட்சியைச் சார்ந்த மூன்று உறுப்பினர்களையும் ராஜிநாமாச் செய்யச் சொல்லி விடுவதாக கூறியிருப்பதும் நினைவிலிருக்கலாம்.

உதவிப் பிரதமர், உள்நாட்டு மந்திரி, செய்திப் போக்குவரத்து இலாகா மந்திரி ஆகிய மூவரும் பதவியைராஜிநாமாசெய்துள்ளனர்

பிரதமர் டாக்டர் சஸ்த்ரோமித் ஜோஜோ, உதவிப் பிரதம மந்திரி, செய்திப் போக்குவரத்து மந்திரி ஆகியோரின் வேலைகளையும், இன்னுமொரு உதவிப் பிரதமரான ஜெய்னுல் அரிபின் உள்நாட்டு மந்திரி பொறுப்பையும், தங்களுக்கு ஏற்கனவேயுள்ள பணிகளுடன் சேர்த்துப் பார்த்துக்கொள்ளுவர் எனத் தெரிகிறது.

இந்த ஏற்பாடுகள் தற்காலிகமானவை என்றும், வெகு அண்மையிலேயே மந்திரி சபையில் பெரியதொரு மாறுதல் இருக்குமெனவும் பிரதமர் தெரிவித்துள்ளாராம்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஜைன ஆலயம் திறக்கப்பட்டதாம்!

மார்வாரிகளின் தாராளமே தாராளம்!

குவாலியரில் இஷ்வெதாம்பர் ஜைன ஆலயங்களில் ஒன்று தாழ்த்தப்பட்ட மக்களுக்கு திறந்துவிடப்பட்டது.

மத்திய பாரத் அரிஜன சேவா சங்க பொதுச் செயலாளர் கே. வி. தாட்டே தலைமையில் 50-க்கு மேற்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் ஆலயத்திற்குள் சென்று மகாவீரரை தரிசித்தார்களாம்!

ஆலயத்திற்குள் செல்லுமுன்பாக இந்த மக்கள் ஜைன முனிவரான கான் தி சாகர் என்பவரின் போதனைகளைக் கேட்டனராம். அந்த முனிவர், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, மதத்தின் மேன்மையைப்பற்றியும், மாமிசம் உண்ணுதல், மது அருந்தாது இருக்கவேண்டிய அவசியம் பற்றியும் கூறினாராம்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் திறந்துவிடப்படாத ஜைன ஆலயங்கள் குவாலியரில் இன்னும் நூற்றுக்கு மேற்பட்டவை உள்ளனவாம்.

Best copy available

நம் நாடு
தி.மு.க.தின இதழ் ஆசிரியர்..அண்ணுதுரை

சென்னை 23—10—1954 சனி

விசித்திர வைதீகர்கள் !

மக்களுக்குள், பிறப்பினல் உயர்வு-தாழ்வு பேசிவருவதும், ஒரு பெரும் பகுதி மக்களைத் தீண்டப்படாதவர்களென, ஊருக்கு வெளியே ஒதுக்கி வைத்திருப்பதும், மக்கள் குலத் துக்கே மானக்கேடு ஆகும். புத்தம், கிறித்துவம், இஸ்லாம் ஆகிய மதக் கோட்பாடுகளில், இக்கொடுமைக்கு இடங் கிடையாது என்பது ஒப்ப முடிந்த உண்மையாகும். இருந்தாலும், மேற்கூறிய மத வழி வந்தவர்களில் சிலர், இந்த அநீதிக்குப் பலியாகி உள்ளனர் என்பது வெளிப்படை. அந்தச் சிலரின் நச்சுத் தன்மைக்கும், பழக்க வாசனையைத்தான் காரணமாகக் கொள்ள வேண்டியதாக இருக்கிறது.

பிறப்பினல் உயர்வு—தாழ்வு பேசி, மக்கள் கூட்டத்தைச் சிறு சிறு சமூகமாகப் பிரித்து வைத்து, ஒன்றை ஒன்று பகைத்து வாழ்ந்து வரும் வகையில், மக்கள் இனத்தில் ஒரு பிரிவை ஏற்பாடு செய்து வைத்திருக்கிறது இந்து மதம். எந்த அமைப்பு, அக்கிரமமானது, அநீதி நிரம்பியது, அழிக்கப்பட வேண்டியது என உலக அறிஞர்கள் கூறி வருகிருர்களோ, அதே அலங்கோலத்தை, அறநெறி, ரிஷி வழி, பிரம்மன் ஏற்பாடு, வேதக் கட்டளை, ஆண்டவன் தந்தது, மூதாதையர் முறை என ஆரிய வேத இதிகாச புராணங்கள் வியங்கோதுகின்றன. அதை நடமாடும் வேத வித்துக்களும் வலியுறுத்தி வருகின்றன. தங்களை ஆசிரியர்களாகக் கொண்டுள்ள செய்தித் தாள்களிலும், ஜாதி ஏற்பாட்டைப் 'புனித ஏற்பாடு' என விளம்பரப்படுத்தி மகிழவும் செய்கின்றனர் அந்த ஆசாரிய புருஷர்கள் !

அதே நேரத்தில், இந்திய அரசியல் சட்டத்தில் உள்ள 'ஒவ்வொருவரும் இந்தியன்' என்ற போலிச் சொல்லுக்கும் முக்கியத்துவம் கொடுத்து வருகின்றனர்.

'ஒவ்வொருவனும் இந்தியன்' என்ற ஏற்பாட்டை ஒப்புக் கொண்டதுபோல பாசாங்கு செய்து, தங்கள் ஜாதி வெறிக்கு ஆக்கம் தேடும் பணியில் ஈடுபட்டு வருகிருர்கள் என்பதை அவர்கள் போக்கு மெய்ப்பித்துக் காட்டுகிறது.

அவர்கள் நாட்டுப் பற்றின் அவசியத்தைக் குறித்து நல்லதோர் பிரசங்கம் செய்வர் ; விடுதலை வாழ்வின் மேன்மையைக் குறித்து வெளுத்து வாங்குவர் ; சமத்துவ நோக்குக் குறித்து சண்டப்பிரசண்டம் செய்வர் ; சமரச சன்மார்க்கத்தைக் குறித்து, சரமாரியாகப் பொழிவர் ; அவ்வளவும் கூறிவிட்டு இறுதியில் சனதன அமைப்புக்குள்ளிருந்து கொண்டே, மேற்குறிப்பிட்ட அவ்வளவு உயர்வுகளையும் எய்த மனிதன் முயற்சிக்க வேண்டும் என முழக்கமிடுவர். உறி தாவியின் உதிரவாயில் உயிருக்கு ஊசாலாடிக் கொண்டிருக்கும் எலியிடம் உற்சாகத்தை எதிர்பார்க்கும் எத்தர்களின் செயலையும் தோற்கடித்துவிடக் கூடியது, இந்தச் சனதனப் பாதுகாப்பாளர்களின் சதிச் செயல் !

ஜாதி வேற்றுமை மக்கள் கூட்டத்தை ஒன்றுபட வைக்காது !

ஜாதிப் பிரிவு, தெளிந்த அரசியல் விழிப்பை உருவாக்க உதவாது !

ஜாதி பாகுபாடு, மக்களாட்சி முறைக்கு மாறுபட்டது; மாய்க்கக்கூடியது !

ஜாதிச் சனியன், ஒருவனை முழு மனிதனுகக் கருத வைக்காது ; அறிவு வளர்ச்சியைத் தடுக்கும் ; திறமையைக் கெடுக்கும் !

ஜாதி நினைப்பு, துன்பங்கள் அனைத்துக்கும் இருப்பிடம் !

ஜாதியின் பிறப்பிடமும், இருப்பிடமும், வளரிடமும் இந்து மதம்தான் !

இந்து மதத்தை, மற்ற மதங்களைப்போல் சம நிலைக்கு உயர்த்த, உத்தமர் காந்தியார், தீண்டாமை ஒழிப்பில் தீவிரம் காட்டினர். ஜாதி உள்ளுணர்வு தொலைக்கப்படாமல், அதன் கூறுகளில் கொடுமை மிக்க ஒன்ருன தீண்டாமையை ஒழிப்பதில், எதிர்பார்த்த அளவிற்கு, உத்தமர் வெற்றி பெறவில்லை. உடன் இருந்தவர்களோ, தீண்டாமை ஒழிப்புக்கு பரம வைரிகள் என்பதை உத்தமர் உணர்ந்துகொள்ளத் தவறிவிட்டார். உடன் உழைப்பது போல் பகட்டாகப் பேசிவந்தவர்களில் பலர், கூடிக் குடிகெடுக்கும் ஜாதி வெறியர்கள் என்பதை உத்தமர் அறிந்து கொள்ளாது போனர். எனவே, அத்துறையில், அவர் உழைத்த அளவுக்கு வெற்றி கிட்டாமல் போய்விட்டதில் ஆச்சரியமில்லை.

அவர் பிறந்த பகுதியில் உள்ள தலாஜா என்ற ஊரில், தீண்டப்படாதோர் எனப்படும் மக்களை அங்குள்ள சில சிற்றுண்டிச் சாலைகளில் அனுமதித்து, சிற்றுண்டிகள் வழங்கப்பட்டது. அவ்வாறு சிற்றுண்டி வழங்கப்பட்ட கிழமையோ, உத்தமர் பிறந்த நாளை யொட்டி கொண்டாடப் பெற்றுவரும் 'தீண்டாமை ஒழிப்பு' கிழமையாகும் !

இதுகண்ட சனதன சத்புருஷர்களுக்குக் கோபம் பொங்கியது ! சிற்றுண்டிசாலை உரிமையாளர்கள் மீது, அவ்வாத்திரத்தைக் காட்டினர் அவ்வர்ணுஸ்ரம தர்மிகள் !

சிற்றுண்டி விடுதிகளின் சுவர், தரை, உட்காரும் பீடம் ஆகியவற்றை யெல்லாம், நல்ல பசும்பால்கொண்டு, சுண்ணும்பு பூசுவதுபோல் பூசிடலாயினர், அந்த விசித்திர வைதிகர்கள் !

தீண்டப்படாதோர் என்று அழைக்கப்படும் மக்கள், சிற்றுண்டி விடுதிகளுக்குள் நுழைந்து உண்பதால், அவ்விடுதிகளுக்கு ஏற்பட்டுவிட்ட தாக, அந்த விசித்திர வைதிகர்கள் நம்பிய 'தீட்டு', பசும்பால் பூச்சால் பறந்தோடிவிட்டதாம் ! என்னே பேதமை ! என்னே பித்தலாட்டம் ! என்று தான்தொலையுமோ இந்த விசித்திர வைதீகர்களின் வக்கிரபுத்தி !

சனதனிகள் கூற்றுப்படி 'தீட்டை'ப் போக்கும் சக்தி பசும் பாலுக்கு இருக்குமானல், அப்பசும்பாலைக் கொண்டே, தீண்டப்படாதோர் எனக் கூறப்படும் கோடிக்கணக்கான மக்களிடம் உள்ள 'தீட்டை'ப் போக்கி, அவர்களையும் மற்ற தீண்டத் தகும் மக்கள் போல் மாற்றி விடுவதும் எளிதாகும். ஆனல் இது பற்றி சனதனிகளுக்குச் சிந்திக்க நேரமில்லையா ? அல்லது அப்பெரும் ஆற்றல் பசும் பாலுக்குக் கிடையாது என்று அவர்களே முடிவு கட்டிவிட்டார்களா ?

சனதனிகள் கூறிடும் 'தீட்டை'ப் போக்கிடும் சக்தி பசும் பாலுக்கு இருக்கிறதோ இல்லையோ, அது நமக்குத் தெரியாது ! ஆனல், பசும் பால் பூச்சினல், பலவிதமான நோய்க் கிருமிகள் உற்பத்தியாகக்கூடும் என்பது மட்டும் நமக்கு நிச்சயமாகத் தெரியும். அதனல் மக்களின் பொது உடல் நலம் கெடும் என்பதையும் நாம் அறிவோம்.

என்னே, விசித்திர வைதிகர்களின் மதி இருந்தவாறு ?

தமிழ் மொழியின் தொன்மை !

திராவிட நாகரீகத்தின் சிறப்பு !

15-10-54ல், கொழும்பு தமிழ் சங்கத்தின் 12-வது ஆண்டு விழாவை இலங்கை பாதுகாப்பு வெளிநாட்டு விவகார உதவி அமைச்சர் தோழர் வ. நல்லையா பி.ஏ., அவர்கள் தொடக்கி வைத்துப் பேசும்போது, கிருஸ்து பிறப்பதற்கு 3,000 ஆண்டுகளுக்கு முன்னரே தமிழ் பல இடங்களிலும் பரவியிருந்தது என்றும், நாகரிகம் அடையாத ஆரியர்கள் இந்தியாவில் நுழைவதற்குப் பல காலத்திற்கு முன்பே திராவிடர்கள் நாகரிகத்தில் மிகச் சிறந்து விளங்கினர்கள் என்றும், பண்டைத் திராவிடர்களிடத்திருந்தே ஆரியர்கள் நாகரிகம் அடைந்தனர் என்றும், இந்து மதத்தில் காணப்படும் சில சீரிய கொள்கைகளும் திராவிட நாகரீகத்திலிருந்து கொள்ளப்பட்டவை என்றும், ஹீராஸ் பாதிரியார் திராவிட நாகரீகம் பற்றிக் கூறியுள்ள கருத்துக்கள் மிகச் சிறந்தவை என்றும், தமிழின் எதிர்காலம் மிக உயர்ந்து விளங்கும் என்றும், அதில் யாரும் ஐயப்பட வேண்டிய அவசியம் இல்லை என்றும் விளக்கிக் கூறினர்கள்.

ஐதராபாத்தில் வைரச் சுரங்கம் !

ஹைதராபாத் மாநிலத்தில் கிருஷ்ண நதிக்கு வடக்கேயுள்ள மெஹ்பூப் மாவட்டத்தில் வைரச் சுரங்கங்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது. இந்திய பூகர்ப்ப சர்வே இலாகாவினர், அடுத்த ஆண்டில், அந்தப் பகுதியில் விரிவான 'சர்வே'யை மேற்கொள்ளுவர் என்று தெரிகிறது.

பத்தரை கோடி டாலர்

பாகிஸ்தானுக்கு அமெரிக்கா உதவுகிறது

பாகிஸ்தானுக்கு அமெரிக்க அரசாங்கம் இந்த நடைமுறை ஆண்டில் பத்தரை கோடி டாலர் உதவும் எனத் தெரிகிறது.

அமெரிக்கா, பாகிஸ்தானுக்கு அதிகப் பொருளாதார உதவி அளிக்கும் இந்தச் செய்தி, அமெரிக்க சர்க்காரால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையினின்றும் தெரியவருகிறது.

பாகிஸ்தானுக்கு இன்னும் அதிகமான இராணுவ தளவாடங்கள் உதவியும் அளிக்கப்படுமென அந்த அறிக்கை கூறுகிறது.

'குற்றமற்றவர் தண்டிக்கப்பட்டனர்!'

'கம்யூனிஸ்டு கட்சிக்கே களங்கம்!'

ஹங்கேரி தொழிலாளர் கட்சித் தலைவர் அறிக்கை !

ஹங்கேரி நாட்டு கம்யூனிஸ்டு கட்சியின் அதிகாரபூர்வமான 'ஸாபாத் நெப்' என்ற இதழில், ஹங்கேரி தொழிலாளர் கட்சியின் புடாபெஸ்ட் கிளைச் செயலாளரான 'இஸ்ட்வான் கோவாக்ஸ்' என்பவர் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் கண்டுள்ளதாக அறிவிக்கப்படுவதாவது :—

"நமது நாட்டின் முன்னுள் அரசாங்கத்தின் பாதுகாப்பு இலாகா, முறையற்ற வழிகளில் பல தோழர்களைக் கைது செய்து, கற்பிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களை— பொய்ச் சாட்சியங்களைக் கொண்டு சுமத்தி, சிறைபடுத்தி தண்டித்திருக்கிறது என்பதை நாம் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். இது ஒரு பெரிய தவறு. மேலும், நமது கட்சிக்கு ஏற்பட்ட 'பாபம்'—கறை ! நமது தோழர்கள் பலர், குற்றமற்றவர்களாயிருந்தும் சிறைத் தண்டனை அனுபவிக்க நேர்ந்துவிட்டது.

கடந்த 1954-ம் வருடம் மார்ச் மாதத்தில் முன்னுள் பாதுகாப்பு அதிகாரியான பீட்டர் என்பவர் ராஜ்ய விரோதக் குற்றம் சுமத்தப்பட்டு, ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டார் ; அந்தச் சம்பவத்திற்குப் பிறகு, ஏற்கெனவே தண்டிக்கப்பட்டிருந்த குற்றமற்றவர்களைப் பற்றிய குற்றச்சாட்டுகளை எல்லாம் விசாரணை செய்து, குற்றமற்றவர்கள்தான் என்று நிரூபிக்கப்பட்டவர்களை எல்லாம விடுவித்து வாழ்வளித்திருக்கிருேம் ; இதன் மூலம், நமது கட்சியினுடையவும், அரசாங்கத்தினுடையவும் செல்வாக்கு நிரூபணமாகியுள்ளது."

அமைச்சர்கள்—அதிகாரிகளுக்கு எதிராக சாதுக்கள் சதி?

துறவிகள் மடம் சதிக் கூடமாயிற்ரும் !

கலியபோலா மட வழக்கில் போலீஸ் சாட்சியம்

கட்டாக்கிலுள்ள கலியபோலா மடத்தில் சில நாட்களுக்கு முன்னர் சாதுக்களுக்கும்—போலீசாருக்குமிடையே நடைபெற்ற கலவரத்தை யொட்டி, கட்டாக் சப்-டிவிஷனல் மாஜிஸ்திரேட் சி. ஜி. நைலர் முன்னிலையில் நடைபெறும் பகல பாபா வழக்கில், மங்களாபாக் போலீஸ் நிலையத்தைச் சேர்ந்த இரண்டாவது அதிகாரி பாவ்ரி பந்துதாஸ் சாட்சியம் கூறினர்.

ஜூலை 21-ந் தேதியன்று கலியபோலா மடத்தில் கைப்பற்றப்பட்ட மூன்று ரிக்கார்டுகளை அவர் குறிப்பிட்டார்.

இந்த தஸ்தாவேஜுகளில் ஒன்று சர்க்கார் அமைச்சர்கள், அதிகாரிகளுக்கு எதிராக நடைபெற்ற சதி ஒன்றினைக் குறிப்பிடும் கடிதமாகும் என்று அவர் குறிப்பிட்டார்.

ஒரு மாஜிஸ்திரேட், இரண்டு சாட்சிகள் ஆகியோர் முன்னிலையில், தான் இந்த தஸ்தாவேஜுகளைக் கைப்பற்றியதாக அவர் மேலும் சாட்சியமளித்தார்.

தந்தத்தால் அலங்கரிக்கப்பட்ட தங்க வாள் ஒன்றைத் தான் கைப்பற்றியதாகவும், அந்த வாளில், 'ராஜா நபகிஷோர் சந்திரமகராஜ் ஜகதேவ்க்கு பரிசளிக்கப்பட்டது' என்று எழுதப்பட்டிருந்ததாகவும் அவர் மேலும் கூறினர்.

பந்துதாஸ் மேலும் சாட்சியமளிக்கையில், கலியபோலா மடத்தில் சுதாகா சிந்தாமணி பைராகி, பக்கீர் ஆகியோரை தான் கைது செய்யச் சென்றபோது, மடத்தின் வாயிலை ஆயுதம் தரித்த பைராகிகள் காவல் புரிந்ததாகவும், தன்னை அவர்கள் கற்களால் தாக்கியதாகவும் கூறினர்.

ஆட்சேபகரமாகப் பேசியதற்காக....

எம். ஆர். கணேசனுக்கு தண்டனை

மதுரை, அக். 20—

"மதுரை மாவட்டம் சமயநல்லூரில் 19—9—53ல் நடைபெற்ற தி. மு. கழகப் பொதுக் கூட்டத்தில், புராணங்களிலும், மனுஸ்மிருதியிலும், உள்ள ஆபாசங்களை விளக்கி ஆட்சேபகரமாகப் பேசியதாக மதுரை தி. மு. கழகப் பேச்சாளர், தோழர் எம். ஆர். கணேசன் மீது மதுரை தாலூகா சப் மாஜிஸ்திரேட் திரு. ராமநாதய்யர் கோர்ட்டில் நடைபெற்று வந்த வழக்கில் இன்று தீர்ப்புக் கூறப்பட்டது.

இ. பி. கோ. 294, 298-வது பிரிவுகளின்படி எதிரியின் பேச்சு குற்றமுடையது என்று கூறி, 294-வது பிரிவுக்கு ஒரு மாதத் தண்டனையும், 298-வது பிரிவுக்கு இரண்டு மாதத் தண்டனையும் விதிக்கப்பட்டு, இரு தண்டனைகளையும் ஏககாலத்தில் அனுபவிக்க வேண்டுமெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

திரு. எம். ஆர். கணேசன் அவர்கள் தண்டனையை எதிர்த்து அப்பீல் செய்யப்போவதாகக் கூறியதின்பேரில் ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டார்," என மதுரை மாவட்ட தி. மு. க. துணைச் செயலாளர் எம். அய்யாசாமி அறிவிக்கிருர்.

பி.-சோ. கட்சி தலைமை

கிருபளானி கைகழுவி விட்டார் ?

லட்சுமணபுரி, அக். 21—

பிரஜா - சோஷலிஸ்டுக் கட்சியின் தலைவராக இருந்து வரும் ஆச்சார்யா கிருபளானி, தமது பதவியை ராஜிணமாச் செய்துவிட்டதாக உ. பி. பத்திரிகைகள் சிலவற்றில் காணப்பட்டுள்ளது. அவர், இந்தத் தகவலை, மாநில மக்கள் சபை பி. சோ. கட்சி உறுப்பினர்கள் கூட்டத்தில் தெரிவித்தாராம்.

மக்கள் சபையிலுள்ள பி.-சோ. கட்சித் தலைவரிடம் இதுபற்றிய விவரங்கள் கேட்கப்பட்டபோது, தமக்கு அதுபற்றி ஒன்றும் தெரியாது என்று கூறியுள்ளாராம்.

எண்ணெய் ஒப்பந்தம்

ஈரான் பாராளுமன்றம். ஒப்புக்கொண்டது !

ஈரான் பாராளுமன்றம் எட்டு நாடுகள் ஏற்று நடத்தும் எண்ணெய் ஒப்பந்தத்தை ஒப்புக் கொண்டுவிட்டது.

120 பேர் கலந்து கொண்ட ஈரானின் கீழ் சட்ட சபையில் 113 பேர் ஒப்பந்தத்தை ஆதரித்தும், ஐந்து பேர் எதிர்த்தும் வாக்களித்தனர் ; 2 பேர் நடுநிலைமை வகித்தனர்.

நாகரீக நாட்டினரின் - நாகரீகமற்ற செயல்!

விருந்திலிருந்து வெளியேறிய அமெரிக்க, பிரிட்டிஷ், பிரெஞ்சுத் தூதுவர்கள்!

கிழக்கு ஜெர்மனி, சீன நாட்டுத் தூதுவர்களுடன் உணவருந்த உட்காரமாட்டார்களாம்!

மாஸ்கோவில் நடைபெற்ற ராஜீய விருந்தொன்றில் கலந்து கொள்ள வந்திருந்த ஒன்பது நாட்டுத் தூதுவர்கள் விருந்தினின்றும் வெளியேறினர் எனத் தெரிகிறது.

பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா உள்ளிட்ட அந்த ஒன்பது நாட்டுத் தூதுவர்களும், கிழக்கு ஜெர்மனி, சீனு ஆகிய இருநாட்டுத் தூதுவர்களுடன் ஒரே மேஜையில் உணவருந்துமாறு விருந்தில் ஏற்பாடு செய்யப்பட்டதே காரணமாம்.

விருந்தினர்கள் எல்லாரும் ஒவ்வொருவராய்க் கூடிக்கொண்டிருக்கும்பொழுதே விருந்து ஏற்பாடுகளைக் கண்ட அந்தத் தூதுவர்கள் வெளியேறிவிட்டனராம்.

விருந்து, சோவியட்ஸ் சாயா எனும் மிகப்பெரிய 'ஹோட்டலி'ல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாம்.

பர்மியத் தூதுவரளித்த அந்த விருந்தில் சோவியத் வெளிநாட்டு மந்திரியான மாலடோவ்தான் பிரதம விருந்தாளியாம்.

வெளியேறிய அந்தத் தூதுவர்கள், மாலடோவுக்கு தனிப்பட்ட வகையில் செய்தி அனுப்பி, தாங்கள் வெளியேறியதற்குக் காரணம் மாலடோவை அவமதிக்க வேண்டுமென்பதால் அல்ல; மாருக, தங்கள் நாட்டு அரசாங்கம் அங்கீகரிக்காத நாடுகளான, கிழக்கு ஜெர்மனி, சீனு ஆகிய நாட்டுத் தூதுவர்களுடன் ஒன்ருக உணவருந்துமாறு செய்யப்பட்டிருந்ததாலேயே வெளியேறியதாகக் கூறியுள்ளனர் எனத் தெரிகிறது.

புற்று நோயும் புகை பிடித்தலும்

"சிகரெட்டிலிருக்கும் புகையிலை அல்ல; மாருக, அப்புகையிலை சுற்றப்படும் காகிதம்தான், புற்று நோய் உண்டாவதற்குக் காரணமாயிருக்கிறது,"

என்று ஆஸ்திரேலியாவிலிருக்கும் சர்வதேச புற்று நோய் ஆராய்ச்சிக் கழகத் தலைவரான டாக்டர் ஸ்நல்பேக் என்பவர் குறிப்பிட்டார்.

"புற்று நோய் உருவாவதற்கு சிகரெட் எவ்வளவு காரணமாமிருக்கிறது," எனக் கேட்டபோது அவர் கூறியதாவது:—

"எந்தப் பொருளுமே எரியும் பொழுது உண்டாகும் கரிப்புகை சாதாரணமாக புற்று நோயை உண்டுபண்ணும் கருவியாகிவிடுகிறது;. சுருட்டு பிடிப்பதினுல் அத்தகைய வியாதி வருவதில்லை; எனவே, புகையிலை, 'சிகரெட்டா'கத் தயாரிக்கப்படும் பொழுது உபயோகிக்கப்படும் காகிதம் பற்றி ஆராய்ச்சி நடத்தப்பட்டு, கரிப்புகை உண்டாகாத காகிதம் கண்டுபிடிக்கப்பட வேண்டும்."

"சிகரெட் பிடிக்கும் பெண்களுக்கு, ஏன் இந்தப் புற்று நோய் தோற்றுவதில்லை?" என்பதை விளக்கும்வகையில், அந்த டாக்டர் குறிப்பிட்டதாவது:—

"உடலில் உருவாகும் கரிப் பொருள், பெண்களுக்கு இயற்கையாக அமைந்துள்ள மாதவிலக்கு முறையினுல், உடலிலிருந்து வெளியேறிவிடுகிறது."

இந்தோனேஷிய விமானிகள்

இந்தியர்களிடம் பயிற்சி பெறுவர்

இந்தோனேஷிய விமானப்படையில் இந்தோனேஷியர்களையே நியமிக்கும் திட்டப்படி விமானமோட்டிகளைப் பயிற்சிவிக்க மூன்று இந்தியர்களை ஆசிரியர்களாக இந்தோனேஷியா அமர்த்தியிருக்கிறது.

விமான நிலைய கிடங்கில் தீ விபத்து

ஆக்ரா, அக். 20—

விமான எஞ்சின்கள், மற்றும் விமான உறுப்புகள், பெயிண்டுகள் முதலியவைகள் இருந்த இந்திய விமானப்படை நிலைய கிடங்கில் தீ விபத்தொன்று நேரிட்டதாகவும், பல்லாயிரக்கணக்கான ரூபாய் பெறுமான பொருட்கள் நாசப்படுத்தப்பட்டன என்றும், இந்தத் தீ விபத்தைத் தவிர்க்க 35 தீயணைக்கும் படை எஞ்சின்கள் கலந்துகொண்டன என்றும் தெரிய வருகிறது.

நார்வே படத் தயாரிப்பாளர்கள் சென்னை வருவர்

நார்வேயைச் சேர்ந்த படத் தயாரிப்பாளர் குழு ஒன்று பம்பாய் வந்து சேர்ந்துள்ளது. இக்குழு, 'டாகுமென்டரி' படங்களைத் தயாரிக்குமாம். கப்பல் தொழில் பற்றிய விபரங்களை இவர்கள் படமெடுக்கிருர்கள் என்று தெரிகிறது.

பம்பாயில் ஒரு வார காலம் தங்கிய பின்னர், இவர்கள் சென்னைக்கு வருவார்கள் என்று தெரிகிறது.

சர்க்கரை உற்பத்தி

செலவு அதிகமாகிறதாம்!

"சர்க்கரை உற்பத்தி செய்வதில் மொத்தச் செலவில் 65 அல்லது 70 சத விகிதம், கரும்பின் விலையாகத் தரப்படவேண்டியுள்ளது; மேலும், தொழிலாளர்களுக்குக் குறைந்த பட்ச சம்பளம் இவ்வளவு தரவேண்டும் என்று சர்க்கார் நிர்ணயித்த பிறகு, தொழிலாளருக்கு அதிகமான சம்பளம்தரவேண்டியிருப்பதால் சர்க்கரை உற்பத்திச் செலவு அதிகரித்துள்ளது."

என்று தக்காண சர்க்கரை உற்பத்தியாளர் சங்கத் தலைவர் ஜெங்கின்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் கரும்பு உற்பத்தி தீவிரமாக்கப்படவேண்டும்; அல்லது அதிகமான இடங்களில் பயிரிடப் படவேண்டும்; அப்போதுதான் நமக்குத் தேவையான சர்க்கரை முழுவதையும் நாமே உற்பத்தி செய்துகொள்ள முடியும்; இப்போது நாம், நமது தேவையில் 40 சத விகிதத்திற்கு அதிகமாக வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

முடியாது!

சென்னை, அக். 21—

சென்னை நகரசபை உறுப்பினர்களுக்கு, ரூ. 100 'அலவன்ஸ்' தரப்பட வேண்டுமென்று, கடந்த செப்டம்பர் 7-ந் தேதியன்று நிறைவேற்றப்பட்ட நகரசபைத் தீர்மானத்தின் யோசனையை ஏற்றுக் கொள்ள முடியாது என்று, சென்னை சர்க்கார் தெரிவித்துள்ளதாம்!

டில்லி ஒப்பந்தம் அமுல் செய்யப்படவில்லை!

பழைய தொல்லை தொடர்கிறது!

இலங்கை ஜனநாயகக் காங்கிரசின் குற்றச்சாட்டு!

புதுடில்லியில், அண்மையில், இலங்கை—இந்தியப் பிரதமர்களிடையே ஏற்பட்ட ஒப்பந்தம் அமுல் செய்யப்படவில்லை என்று இலங்கை ஜனநாயகக் காங்கிரஸ் குற்றம் சாட்டியிருக்கிறது.

குடி உரிமைக்கான மனுக்கள், இலங்கை அதிகாரிகளால், முன்பு போலவே சாதாரண காரணங்களுக்காகத் தொடர்ந்து மறுக்கப்படுகிறது என்று காங்கிரஸ் வருந்துகிறது.

காங்கிரசின் செயலாளர் கே. ஜி. எஸ். நாயர் இதுபற்றிக் கூறுகையில், "அக்டோபர் 18-ல் இரு மனுக்கள், மனுதாரர்கள் விசாரணையின்போது போட்ட கையெழுத்துக்களில் சிறுமாறுதல்கள் காணப்படுகின்றன என்று நிராகரிக்கப்பட்டன," என்ருர்.

குடி உரிமைப் பதிவு அதிகாரி இதுபற்றித் தனது கருத்தைத் தெரிவிக்கையில், "விசாரணையின் போது நேரில் வந்தவர்களும், மனுச் செய்துகொண்டோரும் வேறு நபர்கள் என்று தெரியவந்ததாகக் கூறினுர்.

இதுபோன்று குடி உரிமை மனுக்கள் மறுக்கப்படுவது, புதுடில்லியில் ஏற்பட்டுள்ள ஒப்பந்தத்தின் போக்கிற்கு எதிரான செய்கையாகும் என்று தோழர் நாயர் குறிப்பிட்டிருக்கிருர்.

அவர், சாதாரண காரணங்களுக்காக குடி உரிமை மனுக்களை நிராகரிக்க வாய்ப்பு அளிக்கும் உத்தரவுகளை இலங்கை சர்க்கார் உடனே திரும்பப்பெற வேண்டுமென்று வற்புறுத்தியுள்ளார்.

இதற்கிடையில், இலங்கை சர்க்கார் அரிசிப் பங்கீட்டின் அளவை இரண்டுமடங்காக்கியுள்ளனர் என்று தெரிகிறது.

பங்கீடு உயர்த்தப்பட்டதால், இப்போது ஒவ்வொரு குடும்பமும் வாரந்தோறும் 12 படி அரிசி பெறும் என்று தெரிகிறது. இதுவரை வாரம் ஆறேமுக்கால் படிகளே அளிக்கப்பட்டுவந்தன.

இலங்கை - அமெரிக்கா ஒப்பந்தம்!

விரைவில் ஏற்படுமென அறிவிப்பு

அமெரிக்காவுடன் இலங்கை சீக்கிரமே நேச ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்ளுமென்று இலங்கைப் பத்திரிகைகள் தெரிவித்தன.

இலங்கைப் பிரதமர் அமெரிக்கா செல்வார் என்ற செய்தி வெளியானபோது, கொத்தலாவலை, தனது கட்சி உறுப்பினர்களிடம், நான், தனது நாட்டை அமெரிக்காவிடம் விற்கப் போவதில்லை என்று உறுதியளித்ததும், கட்சியின் முன்கூட்டிய சம்மதமின்றி எந்தவிதமான ஒப்பந்தமும் செய்து கொள்வது இல்லை என்றும் உறுதியளித்திருந்தார் என்பது அனைவரும் அறிந்ததே!

இப்போது தயாரிக்கப்பட்டுள்ள நகல் ஒப்பந்தப்படி, அமெரிக்கர்கள் இலங்கையில் வியாபாரம், மற்ற இதர தொழில்களைச் செய்ய வசதிகள் அளிக்கப்பட்டிருக்கிறதென்றும், அதுபோலவே, இலங்கையர்களுக்கு அமெரிக்காவில் உரிமையளிக்கப்பட்டிருக்கிறது என்றும் கருதப்படுகிறது. ஆனுல், இலங்கையில் நிலவும் பொருளாதார சூழ்நிலையில் இந்தப் பிரிவினுல் பயன் ஏதும் ஏற்படாது என்று பலர் கருதுகின்றனர்.

அமெரிக்காவுடன் மட்டுமின்றி, இலங்கை, இதுபோன்ற ஒப்பந்தங்களை பர்மா, ஜப்பான், இந்தோனேஷியா, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளுடனும் செய்துகொள்ளுமென்றும் தெரிகிறது. இந்த ஒப்பந்தங்களும் ஆளும்கட்சியின் ஒப்புதலுக்கு வரும் என்று தெரிகிறது.

இதுபோல் பல ஒப்பந்தங்கள் செய்ய உலக சுற்றுப் பயணம் போன்றதொரு சுற்றுப் பயணத்தைச் செய்ய இருக்கும் கொத்தலாவலை, தனது மந்திரி சபையிடமிருந்து அனுமதியை, பெருநோக்குடன், முன்கூட்டியே பெற்றுவிட எண்ணிக் கொண்டிருக்கிருர் என்று தெரிகிறது.

இலங்கைக்கு சீனத் துணி!

இலங்கை, சீனு ஆகிய இரு நாடுகளுக்குமிடையில் உள்ள பண்டமாற்றுதலுக்கான ஒப்பந்தப்படி, இலங்கைக்குக் குறைந்த விலையில் ஏராளமான துணிகளை அனுப்பித்தர சீனு சம்மதித்துள்ளதாக அதிகாரபூர்வமான செய்திகள் கிடைத்துள்ளன.

காமுகர்களிடமிருந்து கன்னிப் பெண்களைக் காக்க!

சட்டமியற்ற வேண்டுமென நீதிபதி சோமசுந்தரம் கோரிக்கை

சென்னை, அக். 21—

"........மேலும் கல்வி பரவப் பரவ இம்மாதிரி நிகழ்ச்சிகள் எதிர்காலத்தில் அடிக்கடி ஏற்படலாம்; இதுபோன்ற வழக்குகளில் பெண்ணுக்குப் பரிகாரம் ஏற்படுவதற்கான சட்டம் இயற்றப்பட வேண்டுமென்று யோசனை கூறுகிறேன்; அதாவது, திருமணம் செய்துகொள்வதாக ஒரு இளைஞன் வாக்களித்து, பிறகு அப்பெண்ணைத் திருமணம் செய்துகொள்ளாமல் இருந்தால், 'அந்தப் பெண்தான் அவனுடைய மனைவி' என்று நீதிமன்றம் அறிவித்துத் தீர்ப்பளிக்க வேண்டும்; வேறு எந்தப் பெண்ணையும் அவன் திருமணம் செய்துகொள்ளாதபடி தடுக்க வேண்டும்; இத்தகைய சட்டம் இளைஞர்கள் விஷயத்தில் நல்ல படிப்பினையை அளிப்பதுமட்டுமல்லாமல், நிரபராதிகளான ஏதுமறியாப் பெண்கள் கெடுக்கப்படாமல் இருப்பதற்கும், அத்தகையவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் விஷயத்தில் களங்கம் ஏதும் ஏற்படாமலிருப்பதற்கும் அடிகோலுவதாகும்,"

—என்று, சென்னை உயர்நீதிமன்றத்தில், கிருஷ்ணவேணி என்ற பெண்ணிற்கு மாதம் ரூ. 25 ஜீவனும்சம் தர வேண்டுமென்று திருப்பத்தூர் சப்-டிவிஷனல் மாஜிஸ்திரேட் உத்திரவிட்டிருந்ததை எதிர்த்து அப்பீல் செய்யப்பட்ட வழக்கில் தீர்ப்பளிக்கையில் நீதிபதி சோமசுந்திரம் குறிப்பிட்டு, அப்பீலை நிராகரித்தார்.

திருப்பத்தூரைச் சேர்ந்த கிருஷ்ணவேணி என்ற 19 வயதுடைய பெண்ணிடம் ஜகதீச ராவ் என்பவர் தொடர்பு கொண்டு, திருமணம் செய்து கொள்வதாக வாக்களித்து, அப்பெண் கர்ப்பவதியான பின்னர், ஜகதீச ராவ் அப்பெண்ணைக் கைவிட்டு விட்டாராம்.

கிருஷ்ணவேணிக்கு மாதம் ரூ.25 ஜகதீசராவ்ஜீவனும்சமாக கொடுக்க வேண்டுமென்று திருப்பத்தூர் சப்-டிவிஷனல் மாஜிஸ்திரேட் உத்தரவிட்டிருந்தார். இந்த உத்தரவை ரத்து செய்யக் கோரி ஜகதீசராவ் சென்னை உயர்நீதி மன்றத்தில் அப்பீல் தாக்கல் செய்திருந்தார்.

நீதிபதி சோமசுந்தரம் இந்த வழக்கில் தீர்ப்பளிக்கையில், ஜகதீசராவ் அப்பெண்ணிடம் தொடர்பு கொண்டு, பின்னர் அப்பெண் கர்ப்பவதியானதும் கம்பி நீட்டிவிட்டார் என்றும், அவர் அயோக்கியத்தனமாக நடந்துகொண்டார் என்று சொல்லவேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

கிருஷ்ணவேணியைத் திருமணம் செய்து கொள்வதாக ஜகதீசராவ் வாக்களித்தது பற்றிக் குறிப்பிடுகையில் நீதிபதி அவர்கள் கூறியதாவது:—

"இம்மாதிரி வாக்குறுதி செய்யப்பட்டால் அதை திட்டமாக நிறைவேற்றும்படி கட்டாயப்படுத்த இதுகாறும் சட்டத்தில்விதி ஏதும் ஏற்படுத்தப்படவில்லை. இதுபோல கெட்ட எண்ணம் கொண்ட இளைஞர்கள் பலர் திருமணம் செய்துகொள்வதாகக் கூறி, நிரபராதிகளான பல அப்பாவிப் பெண்களைத் தந்திரமாக ஏமாற்றுவதை நான் கண்டிக்கிறேன். சென்ற ஆறுமாத காலத்தில் இது போன்ற பல வழக்குகளை நான் கையாண்டிருக்கிறேன். எச்சரிக்கையின்றி உள்ள அப்பாவிப் பெண்களிடம் மிக நட்பு கொண்டு பழகி, திருமணம் செய்து கொள்வதாக வாக்களித்து, பிறகு அவர்கள் கர்ப்பவதிகளானவுடன் அவர்களைக் கைவிட்டுவிட்டு, இளைஞர்கள் இதுபோன்ற பெண்களை சுலபமாக ஏமாற்றுவதற்குக் காரணம், தற்போது இந்தப் பெண்களுக்குள்ள சூழ்நிலை தான் என்று சொல்ல வேண்டும். இது இளம் பெண்களுக்கு ஒரு மகத்தான சோகக் கதையாக முடிகிறது. பெற்ரேர்கள், சரிவர பெண்களைக் கவனித்துக் கொள்ளாததாலும், இம்மாதிரி சம்பவங்கள் அடிக்கடி நிகழ்கின்றன. எப்படியாயினும் இந்த மோசடிக்காரர்களுக்கு இடம் கொடுக்கக் கூடாது."

தடை விதிக்கப்பட்ட பொருள்கள்

கள்ளக் கடத்தலின்போது கைப்பற்றப்பட்டன

புதுச்சேரி ஆகிய பகுதிகளிலிருந்து இந்தியாவுக்குக் கொண்டுவர தடை விதிக்கப்பட்டுள்ள கைக்கடிகாரங்கள், கண்ணுடிமணிகள், 'ஸ்வான்' பௌண்டன் பேனுக்கள், சிகரெட் பற்றவைப்புச் சாமான்கள் 'காரவன்' சீட்டுக் கட்டுகள் போன்ற சுமார் ரூ. 75,000 பெறுமானமுள்ள சாமான்களையும், அதனை ஏற்றி வந்த லாரி ஒன்றையும், சென்ற வாரத்தில், சென்னை மத்திய 'எக்ஸைஸ்' கலெக்டர் காரியாலய அதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளனராம்.

மேற்கு ஜெர்மனி ஆயுதபாணியாவதற்கு........

இத்தாலி மக்கள் சபை ஒப்பம்!

மேற்கு ஜெர்மனியை ஆயுதபாணியாக்குவது பற்றிய லண்டன் ஒப்பந்தத்தை இத்தாலிய நாட்டு மக்கள் சபை பலத்த எதிர்ப்புக்கிடையே, மிகக் குறைந்த அதிக பட்ச ஓட்டுக்களை அளித்து மந்திரி சபைமீது நம்பிக்கை தெரிவித்தது.

295 வாக்குகள் ஆதரவாகவும், எதிராக 265 வாக்குகளும் அளிக்கப்பட்டன; ஏழு பேர் ஓட்டெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.

இந்த விவாதத்தின்போது மக்கள் சபை உறுப்பினர்கள் பெரும் கலகம் செய்து கொண்ட செய்தியும் வேறொரு இடத்தில் வெளியாகியுள்ளது.

கம்யூனிஸ்டுகள், இடதுசாரி சோஷலிஸ்டுகள் தீர்மானத்தை எதிர்த்தும், குடியரசுக் கட்சியினர், லிபரல் கட்சியினர், கிறிஸ்துவ ஜனநாயகக் கட்சியினர், சமூக ஜனநாயக் கட்சியினர் ஆகியோர் ஆதரித்தும் வாக்களித்தனர் என்று தெரிகிறது.

பாகிஸ்தானில் அரசியல் நெருக்கடி

நகல் அரசியல் திட்டத்தை மேற்கு பஞ்சாப் லீகர்கள் நிராகரிப்பர்

மாகாணங்களுக்கு அதிக அதிகாரம் தேவை!

லாகூரில் முஸ்லீம் லீகர்களின் இரகசியக் கூட்டம்

மாகாணங்களுக்கு அதிக அதிகாரங்கள் தரப்பட வேண்டுமென்றும், மேற்கு பாகிஸ்தானுக்கு, பாகிஸ்தானுக்குள்ளேயே உப-கூட்டாட்சி ஒன்று அவசியமென்றும் பாகிஸ்தானில் கிளர்ச்சிகள் வலுத்து வருகின்றன. தற்போது நிறைவேறி இருக்கும் பாகிஸ்தான் நகல் அரசியல் சட்டத்தை எதிர்த்து முஸ்லீம் லீகர்கள் கிளர்ச்சி செய்கிறார்கள். அரசியல் நிர்ணய சபைக் கூட்டத்தில், பாகிஸ்தான் நகல் சட்டத்தை நிராகரிக்க மேற்கு பாகிஸ்தானைச் சேர்ந்த லீகர்கள் முடிவு செய்துள்ளனர். இந்த முடிவிற்கு லீகின் பெருந் தலைவர்கள் பலரும் ஆதரவளிக்கின்றனரெனக் கூறப்படுகிறது.

★ கராச்சி, அக். 22—

மேற்கு பாகிஸ்தான் அமைச்சர்கள் பலரும், முஸ்லீம் லீகின் தலைவர்களும், பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபை உறுப்பினர்கள் பலரும் லாகூரில் நேற்றிரவு சந்தித்துப் பேசி, அக்டோபர் 28-ந் தேதியன்று பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபையில் வர இருக்கும் பாகிஸ்தானின் நகல் அரசியல் சட்டத்தை நிராகரிப்பது என்று முடிவு செய்தனராம்!

பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபையில் உள்ள பஞ்சாப் உறுப்பினர்கள் அனைவரும் இராஜினமா செய்ய வேண்டுமென்று உறுப்பினர்களைக் கோரி தீர்மானம் ஒன்று நிறைவேறியதாக இக் கூட்டத்தைப் பற்றிய மற்றொரு செய்தி கூறுகிறது.

உறுப்பினர்களிடையே கருத்து வேற்றுமை காணப்பட்டாலும், நகல் அரசியல் திட்டத்தில் மத்திய மாநிலங்களுக் கிடையே அதிகாரங்கள் பிரிக்கப்பட்டிருக்கிற முறை தவறு என்று அனைவரும் ஒப்புக் கொண்டார்களாம்.

'மேற்கு பாகிஸ்தானுக்கு ஒரு உப-கூட்டாட்சி தேவை,' என்பதை, அனைவரும் வற்புறுத்தியதுடன், 92, 'ஏ'-பிரிவின்படி கவர்னர் ஆட்சியைப் பிரகடனம் செய்யும் அதிகாரம், மத்திய சர்க்காரிடமிருந்து சமஷ்டி பிரிவிடம் செல்லவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டதாம்.

உப-கூட்டாட்சி அரசாங்கம் பற்றிய நோக்கம் கூட்டத்தில் கைவிடப்பட்டதாகவும், மத்திய சர்க்காருக்கு பாதுகாப்பு, வெளி நாட்டு விவகாரம், நாணயம் ஆகிய மூன்றின் அதிகாரங்களே தரப்படவேண்டுமென்று கூட்டம் முடிவு செய்ததாகவும் 'டான்' இதழ் தெரிவித்திருக்கிறது.

மேற்கு பாகிஸ்தானைப் பொறுத்தமட்டிலும் அரசியல் நிர்ணய சபைக்குப் புதுத் தேர்தல் நடைபெற வேண்டுமென்றும், மாகாண அமைச்சர்களை 'டிஸ்மிஸ்' செய்யும் அதிகாரம் மத்திய சர்க்காருக்கு இருக்கக்கூடாது என்றும் முடிவு செய்ததாக 'சிவில் அண்டு இராணுவ கெஜட்' என்னும் பத்திரிகை தெரிவிக்கிறது.

இக்கூட்டத்தில், வடமேற்கு எல்லை மாநில முதல் அமைச்சர் சாதார் அப்துர் ரஷீத், சிந்தின் முன்னாள் முதல் அமைச்சர் குர்-ரோ எல்லைப்புற மாநில கல்வி அமைச்சர் மியான்சா பர்ஷா, எல்லை முஸ்லிம் லீகின் முன்னாள் பொதுச் செயலாளரான யூசப் கட்டக், சிந்து கவர்னர், மேற்கு பஞ்சாப் கவர்னர் நூன், பாகிஸ்தான் மத்திய அமைச்சர் குர்மானி ஆகியோர் கலந்துகொண்டதாகத் தெரிகிறது.

இக்கூட்டத்தில் முஸ்லிம் லீகைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள் 25 பேர்களும், அரசியல் நிர்ணய சபை; மாகாண சட்டசபை ஆகியவற்றின் உறுப்பினர்களும் கலந்து கொண்டார்கள் எனலாம்.

மேற்கு பாகிஸ்தானுக்கு உப—கூட்டாட்சி நிறுவுவதை முன்னாள் எல்லைமாநில முதல் அமைச்சர் கான் சாகிப்பும் ஒப்புக்கொள்கிறார் என்று தெரிகிறது.

பாகிஸ்தான் அரசியலில் நெருக்கடியான இந்த நேரத்தில் அக். 31-ந் தேதி கூடவிருந்த பாகிஸ்தான் முஸ்லீம் லீக் மாநாடு ஜனவரிக்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

அவசரமாக பாகிஸ்தான் திரும்பும் பிரதமர் முகமது அலி, பாகிஸ்தானில் நெருக்கடி எதும் இருப்பதாக, தான் நினைக்கவில்லை என்று நியூயார்க்கில் கூறியுள்ளாராம்.

"லாகூரில் நடைபெற்ற கூட்டத்தின் முடிவுகளை கராச்சி செய்திகள் உறுதிப்படுத்தவோ அல்லது மறுக்கவோ இல்லை; கூட்டம் இரகசியமாக நடந்தது, முடிவுகள் ஏகமனதாகச் செய்யப்பட்டன என்றே செய்திகள் கூறுகின்றன.

---

20 சர்க்கரை ஆலைகள்........

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிடைக்கிறதென்றும் குறிப்பிட்டார்.

40 சர்க்கரை ஆலைகள் ஏற்படுத்த அனுமதி கோரி, தென்னிந்தியாவிலிருந்து மத்திய சர்க்காருக்கு மனுக்கள் வந்ததாகவும், அவற்றுள் 15 அல்லது 20 ஆலைகளுக்குத்தான் அனுமதி வழங்கப்படும் என்றும் அதே கூட்டத்தில் அவர் அறிவித்தார்.

உண்மையல்லவாம்!

கிருபளானி மறுக்கிறார்

அண்மையில் உத்திரபிரதேசத்தில் நடந்த பிரஜா சோஷலிஸ்டு கட்சி எம். எல். ஏ.,க்களும், கட்சி உறுப்பினர்களும் அடங்கிய கூட்டத்தில் தாம் ஆற்றிய சொற்பொழிவு பற்றியும், தாம் தலைவர் பதவியிலிருந்து விலகப்போவதாகவும் பத்திரிகைகளில் வந்துள்ள செய்திகள் உண்மையானதல்லவென்றும், அவைகள், தாம் சொன்னவைகளைத் திரித்துப் பிரசுரித்துள்ளன என்றும் பி.-சோ. கட்சித் தலைவர் ஆச்சாரியா கிருபளானி கூறியுள்ளார்.

(இச்செய்தி 2-ம் பக்கத்தில் வெளியாகியுள்ளது.

சேலம் மாவட்டத் தேர்தல்

சேலம் மாவட்டத் தேர்தலில் வாழப்பாடி தொகுதியில் தி. மு. கழகத்தின் ஆதரவு பெற்று சுயேச்சையாகப் போட்டியிட்ட தோழர் பி. நாதப்ப கவுண்டர் 955 ஓட்டுக்கள் அதிகமாகப் பெற்று காங்கிரஸ் அபேட்சகர் மாணிக்கப்ப படையாச்சியை தோற்கடித்தார்.

வாக்கு விவரம்

நாதப்ப கவுண்டர்	(சு)	7,375
மாணிக்கப் படையாச்சி	(காங்)	6,420
செல்லாதவை		1,326

வருமான வரி சட்டப்பிரிவு செல்லாதென்ற தீர்ப்பின் எதிரொலி!

விசாரணைக் குழு வேலை செய்யாது!

வருமான வரி விசாரணைக் குழு சட்டத்தின் 5-(1)-வது பிரிவு செல்லாது என்று இந்தியத் தலைமை உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்திருப்பதையொட்டி, வருமான வரி கொடுக்காது ஏமாற்றுபவர்களை விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்டிருந்த குழு, இனி வேலை செய்யாது என்று அறிவிக்கப்படுகிறது.

நிரந்தரமாகவே அந்தக் குழு வேலை செய்யாமல் மூடிவிடப்படுமா என்பது, பிரதமர் நேருவும்; நிதிமந்திரி தேஷ்முக்கும் தங்கள் சுற்றுப்பிரயாணங்களை முடித்துத் திரும்பியதும் தான் தெரியவருமாம்.

விசாரணைக் குழு இந்தத் தீர்ப்புக்குமுன் முடிவு கூறியுள்ள வழக்குகளின் நிலையென்ன என்பதைக் கூறவில்லை.

அவ்வழக்குகளில் என்ன முடிவு கொள்வது என்பது பற்றியும் நிதி மந்திரி வந்த பின்னரே முடிவு செய்யவேண்டியிருப்பதாக விசாரணைக் குழு கருதுகிறதாம்.

★

தலைமை உயர் நீதிமன்றத் தீர்ப்பு விவரம்

1947-ம் ஆண்டில் இயற்றப்பட்ட வருமான வரி விசாரணைக் குழு சட்டத்தின் 5-(1)-வது பிரிவு அரசியல் சட்டத்துக்கு முரணைப் பாரபட்சம் காட்டும் முறையில் அமைந்துள்ளதென்றும்; ஆகவே இப்பிரிவு செல்லுபடியாகாதென்றும் கூறி, இந்தியத் தலைமை உயர்நீதி மன்றம் தீர்ப்புக் கூறியுள்ளது.

வருமான வரி செலுத்தாமல் ஏமாற்றியவர்கள் மீது தொடரப்பட்ட வழக்குகளைப் பரிசீலிக்க விசாரணைக் குழுவிடம் அரசாங்கம் கொடுத்தது. இவ்வழக்குகளில் தீர்ப்பளிக்கையிலேயே மேற்படி சட்டத்தின் அந்தப் பிரிவு செல்லுபடியாகாதென்று நீதிபதிகள் ஒருமித்துத் தீர்ப்புக் கூறியுள்ளனர்.

அனுமதி கிடைக்கிறது!

காரைக்கால் மேயராக இருக்கும் பக்கிரிசாமி பிள்ளை அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, போக்குவரத்து வசதிகளைக் கட்டுப்பாடில்லாமல் அனுமதிக்கவும், அத்தியாவசியப் பொருட்களை எடுத்துச் செல்லவும் அனுமதிக்க புதுவையிலுள்ள இந்திய 'கான்சல்—ஜெனரல்', சம்மந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டுள்ளாராம்.

உணவு உற்பத்தியை அதிகரிக்க!

போட்டிகள் நடத்துகிறார்களாம்

உணவு உற்பத்தி போட்டிகளை ஏற்படுத்தி, அப்போட்டியில் முதன்மை இடம் பிடிக்கும் தாலூகாவுக்கு ரூ. 10,000 பரிசளிக்க இந்திய சர்க்கார் தீர்மானித்திருக்கின்றனர்.

போட்டியில் அதிகம் பேர் கலந்துகொள்ளும் தாலூகாவுக்கும் ரூ. 5,000 சமுதாயப் பரிசு அளிக்கப்படும்.

இந்தப் பரிசுத் தொகை முழுவதும், பரிசுபெற்ற தாலூகாவின் பொதுநலனுக்காகப் பாடசாலை கட்டுதல், புத்தகசாலை அமைத்தல் போன்ற காரியங்களுக்காகச் செலவிடப்படும்.

கண்ணதாசன்

நிகழ்ச்சிகள்

அக். 24 பல்லாவரம் (நாடகம்)
25 நுங்கம்பாக்கம் (குறள் விழா)
27 பட்டாபிராமம்
28 தாம்பரம் (கி. கல்லூரி)
29 லெப்பக்குடி
31 இராயப்பேட்டை
நவ. 6 அவிநாசி
7 திருப்பூர்
8 மதுரை (தியாகராசர் கல்லூரி)
13 சித்தூர்
14 கொறுக்குப்பேட்டை
16 எழும்பூர்

சொற் பயிற்சிக் கூட்டம்

23—10—54 இரவு 9 மணிக்கு சென்னை 50-வது வட்டதி. மு. க. பணி மனையில் தோழர் பாலு தலைமையில் 'தீபாவளியும்—திராவிடமும்' எனும் பொருள் குறித்து தோழர்கள் பலர் பேசுவர்.

* * *

24—10—54 காலை 10 மணிக்கு சென்னை, முத்தியாலுப்பேட்டை, எண். 17, சாலைவிநாயகர் கோயில் தெரு முத்தமிழ் மன்றத்தில் தோழர் மா. லோ. பாலசுந்தரம் தலைமையில் 'வரலாற்றில் நாம்' என்பது பற்றி பல தோழர்கள் பேசுவர்.

1,500 ஓராசிரியர் பள்ளிகள்!

சென்னையிலும் திறக்கப்படும்

சென்னை மாநிலத்தில் இந்த ஆண்டு டிசம்பர் திங்களிலிருந்து, ஓராசிரியர்கள் கொண்ட 1,500 புதிய ஆரம்பப் பள்ளிகள் திறக்கப்படுமாம்; இந்தப் பள்ளிகளில் 1 முதல் 3 வகுப்புகள் மட்டும் இருக்குமாம்.

ஆயிரமும், அதற்கதிகமுமான மக்கள் எண்ணிக்கை கொண்ட கிராமங்களில் ஏற்கெனவே 1,270 பள்ளிகள் (ஓராசிரியரைக் கொண்டு) நிறுவப்பட்டுள்ளன. இனிமேல் துவக்கப்பட இருக்கும் இந்த 1,500 பள்ளிகளும் சுமார் 500 பேர் எண்ணிக்கை கொண்ட கிராமங்களில் நிறுவப்படும்.

இந்தப் பள்ளிகள் நிறுவப்பட அவசியமான நில வசதிகளை கிராம மக்களே அளிப்பரென்றும், அவ்வித வசதிகளில்லாத இடங்களில் சர்க்கார் ரூ. 500 மானியம் கொடுத்து அவைகள் நிறுவப்படுமென்றும் தெரிகிறது.

இந்தப் பள்ளிகளுக்கு நியமிக்கப்படவிருக்கும் ஆசிரியர்கள் 'ஆசிரியர் பயிற்சி' பெற்றவர்களாக இருக்க வேண்டுமென்ற கட்டாயமில்லை; அவர்கள் எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்களானால் மாதம் ரூ. 40-ம், ரூ. 18 அலவன்சுமாக அளிக்கப்படுவார்கள். பட்டதாரிகளானால் மாதம் ரூ. 50-ம், ரூ. 18 அலவன்சுமாக அளிக்கப்படுவார்கள்.

சாதாரண ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படுவதைக் காட்டிலும், இந்தத் தொகை சிறிது அதிகமாக இருக்கக் காரணம், ஓராசிரியர் பள்ளிகளுக்கு ஆசிரியர்கள் கிடைப்பது சிரமமாக இருப்பதால், அவர்களைக் கவருவதற்காகவேயாம்!

படித்தும் வேலையில்லாமல் தவிப்போருடைய நெருக்கடிகளைக் குறைக்க இந்திய சர்க்காரின் திட்டத்தின்கீழ் மத்திய சர்க்காரின் நிதி உதவியுடன் ஆரம்பிக்கப்பட இருக்கும் இப்பள்ளிகள், முடிவில், ஜில்லா போர்டுகளின் (மாவட்டக் கழகங்கள்) நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்படுமாம்.

ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டுள்ள 1,270 ஓராசிரியர் பள்ளிகளின் நிலைமைகளைப் பற்றி அறிந்துவர விசேட அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

வ. உ. சி. இளைஞர் கழக 6-ம் ஆண்டு விழா

24—10—54 மாலை 6 மணிக்கு சென்னை, சேத்துப்பட்டு, வைத்தியநாத முதலி தெருவில், வ.உ.சி. இளைஞர் கழகத்தின் மூன்றாவது ஆண்டு விழா, தோழர் வெ. சுப்ரமணியனார் தலைமையில் நடைபெறும். தோழர்கள் மு. கருணாநிதி, க. அப்பாதுரை, கி. மனோகரன் ஆகியோர் பேசுவர். தோழர் இரா. நெடுஞ்செழியன், பேட்டைப் பெரியார் சே. ப. முருகேசனார் ஆகிய இருவரின் படத் திறப்பு நடைபெறும்.

அழகிரி நாடக மன்ற துவக்க விழா

சென்னை, மீர்சாகிப்பேட்டை 43-வது வட்ட தி. மு. க. தோழர்களால் அமைக்கப்பெறும் அழகிரி நாடக மன்றத்தின் துவக்க விழா, 24—10—54 காலை 9 மணியளவில், இராயப்பேட்டை, நல்லண்ண முதலி தெரு, 52-ம் எண்ணுள்ள இல்லத்தில் தோழர் கோ. இளவரசு தலைமையில் நடைபெறும். தோழர் முகவை ஆர். எஸ். பாண்டியன் நாடக மன்றத்தைத் திறந்துவைத்துப் பேசுவார்.

குறள் நெறி விழா— இரண்டாம் நாள்

சென்னை, நுங்கம்பாக்கம் அவென்யூச் சாலை எதிர் திடலில், குறள் நெறி விழா 24—10—54 மாலை 5 மணிக்கு, தோழர் அன்புகணபதி தலைமையில் நடைபெறும். தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், நன்னன், பி. ஆர். மீனாட்சிசுந்தரனார் மற்றும் பலர் பேசுவர். இரவு 10 மணிக்கு 'குமண வள்ளல்' ஓரங்க நாடகம் நடைபெறும்.

* * *

25—10—54 மாலை 5 மணிக்கு குறள் நெறி மூன்றும் நாள் விழா தோழர் கா. அப்பாதுரை தலைமையில் நடைபெறும். தோழர்கள் மு. கருணாநிதி, கண்ணதாசன், ஏ. கே. வேலன் ஆகியோர் பேசுவர். இரவு 10 மணிக்கு 'குறள் தொண்டன்' ஓரங்க நாடகம் நடைபெறும்.

'ராமாயணம்'—நாடகம்

24—10—54 மாலை 6½ மணிக்கு சென்னை ஒற்றைவாடை தியேட்டரில், தோழர் எம். ஆர். ராதா குழுவினரின் 'ராமாயணம்' நாடகம் வந்தனோபசார முறையில் கடைசி நாளாக நடைபெறும்.

உதவி நிதி—இசைக் கச்சேரி

பம்பாய்த் தமிழ் முஸ்லீம் சங்க உதவி நிதிக்காக, 25—10—54 அன்று பரேல், தாமோதர் ஹாலில், தோழர் என். கே. அமீர் சுல்தான் தலைமையிலும், 28-10-54 அன்று (மியூசியம்) ஜஹாங்கீர் ஹாலில் தோழர் எஸ். கே. பட்டீல் தலைமையிலும் தோழர் நாகூர் ஈ. எம். அனீபா கோஷ்டியாரின் இசைக் கச்சேரி நடைபெறும்.

'புரட்சிப் பெண்'—நாடகம்

26—10—54 இரவு 8 மணிக்கு பம்பாய் தாராவி குட்டிவாடி திறந்த வெளியரங்கில், பம்பாய் தி. மு. கழக நடிகர் குழுவினரின் 'புரட்சிப் பெண்' நாடகம் நடைபெறும்.

சென்னை 50-வது வட்ட தி. மு. கழக பொதுக் குழு உறுப்பினர்கட்கு

25—10—54 காலை 9 மணிக்கு சென்னை 50-வது வட்ட தி. மு. கழக பணி மனையில் தோழர் திருநாதன் தலைமையில் பொதுக் குழு கூடும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.